©
GOVERNMENT OF TAMIL NADU
2013

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 4.00 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 268] CHENNAI, THURSDAY, SEPTEMBER 19, 2013
Purattasi 3, Vijaya, Thiruvalluvar Aandu–2044

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

**TAMIL NADU ELECTRICITY REGULATORY COMMISSION, CHENNAI.**

AMENDMENT TO THE TAMIL NADU ELECTRICITY DISTRIBUTION CODE.

*(Notification No. TNERC/DC/8-17, dated 06-09-2013.)*

**No. VI(2)/203(a)/2013.**

In exercise of the powers conferred by Section 181 read with Section 46 of the Electricity Act, 2003 (Central Act 36 of 2003) and all other powers enabling it in this behalf, the Tamil Nadu Electricity Regulatory Commission hereby makes the following amendment to the Tamil Nadu Electricity Distribution Code.

AMENDMENT

In the said Code, for regulation 39, the following regulation shall be substituted, namely:—

***"39. Temporary Supply:***

Temporary supply of electricity to any premises shall be dealt with as below:—

*(1)* *If the temporary supply as in the case of construction of building etc. is to be converted into permanent supply after completion of the construction, normal procedure to effect the supply to regular categories shall be followed and the consumer shall be charged under temporary supply tariff, i.e., permanent supply procedure shall be adopted with temporary supply tariff. An undertaking shall be obtained from the consumer to the effect that the consumer will accept to convert the temporary supply into appropriate permanent category after completion of the construction work in accordance with the regulations in force and to pay the charges if any arising out of such conversion. In such conversion, if conversion from lower voltage to higher voltage is involved, the existing lower voltage service connection shall be closed and new higher voltage service connection shall be provided in accordance with the regulations in force. In case of conversion or closing of existing service connection account involves dismantling of part or whole of existing service line or erection of part or whole of service line or improvement of part or whole of existing service line or combination of the above, due credit/debit shall be given to the consumer as below:—*

*(i)* *Book value / written down value subject to a minimum of 20% of the cost of retrievable and reusable materials shall be credited.*

*(ii)* *Scrap value on the retrievable but not reusable materials shall be credited and this value shall be not less than 10% of its original value. No credit or debit shall be levied on the non-retrievable materials.*

*(iii)* *Dismantling, transport and overhead charges shall be chargeable to the consumer.*

*(iv)* *Cost of material,transport and erection charges for the part or whole of the new service line or improvement to the existing service line shall be chargeable to the consumer.*

*(2)* *In case of providing supply purely for the temporary purpose, the following procedure shall be followed.*

*(i)* *Cost of extension/improvement of lines for providing the supply shall be charged to the consumer.*

*(ii)* *Security deposit equivalent to three times of the tariff charges for the consumption as calculated below shall be collected and maintained throughout the temporary supply period:*

***Security Deposit*** *=* ***3*** *x* ***L*** *x* ***LF*** *x* ***H*** *x* ***D*** *x* ***T***

*Where,*

*L = Connected Load in kW*

*LF = Load Factor = 0.5*

*H = Number of hours of a day= 24 Hours*

*D = Number of days of billing cycle period as specified in regulation 8(3) of the Supply Code/ proposed period of use whichever is less*

*T = Tariff rate of Temporary supply as specified by the Commission from time to time*

*(iii)* *The security deposit shall be reviewed during every billing cycle or proposed period of use and enough care shall be taken to maintain the security deposit at the average level of consumption subject to the minimum of the calculated level till the closing of the temporary supply account. At any time, if the security deposit is found to be less than the amount specified, the additional security deposit shall be collected along with the Current Consumption charges.*

*(iv)* *The temporary supply account shall be closed after the completion of temporary supply period and credit shall be refunded to the consumer as specified in sub regulation (1) of this regulation. The Licensee shall refund the balance deposit, if any after the temporary supply period is over within a period specified by the Commission."*

(By Order of the Tamil Nadu Electricity Regulatory Commission)

S. GUNASEKARAN,
*Secretary,*
*Tamil Nadu Electricity Regulatory Commission.*

Chennai-600 008,
6th September 2013.

## EXPLANATORY STATEMENT

A separate tariff applicable to the temporary supply for construction and for other temporary purposes is given in the Commission's Retail tariff Order dated 20-06-2013. The applicants who want temporary supply for the construction purpose, especially in the case of domestic or residential buildings may find it difficult to follow the special terms and conditions for effecting temporary supply of electricity specified in regulation 39 of the Tamil Nadu Electricity Distribution Code. Therefore, it is proposed to segregate the temporary supply of electricity in two categories as below and specify the separate terms and conditions for effecting supply:—

(1) The temporary supply which is likely to be converted into permanent supply as in the case of construction of building etc,

(2) Supply purely for the temporary purpose.

The proposed amendment seeks to give effect to the above proposal.

(By Order of the Tamil Nadu Electricity Regulatory Commission)

S. GUNASEKARAN,
*Secretary,*
*Tamil Nadu Electricity Regulatory Commission.*

Chennai-600 008,
6th September 2013.

**Statement Showing Existing Provision and the Provision as Amended**

*Existing provision*

*(1)*

***"39. Temporary Supply:***

*Temporary supply of electricity to any premises will be considered by the Licensee on special terms and conditions as below:-*

*(1) The Licensee shall extend temporary supply on application from intending consumer with required charges and on receipt of deposit.*

*(2) The deposit for temporary supply shall be calculated as below:*

*Total value of materials to be used on the extension and Service connection A*

***Less:** Value of meters / meter board / cut out B*

*Net value of materials to be recovered from the consumer*
*A – B*

*Add: Labour charges to be incurred*
*C*

*Add: Overhead 15% on A–B+C*

*D*

*Probable consumption charges Advance current consumption (CC) charges E*

*Total deposit to be obtained F*

*(A – B + C + D + E)*

*(3) On completion of temporary supply works, the following charges shall be adjusted against the deposit.*

*1. 10% cost of the retrieved materials.*

*2. 10% cost of meter devoluted.*

*3. 100% cost of materials not retrieved.*

*4. Original erection charges, dismantling charges and transport charges*

*5. Overhead at 15% on the total cost of materials plus labour charges (including cost of meter)*

*Proposed amendment*

*(2)*

***"39. Temporary Supply:***

*Temporary supply of electricity to any premises shall be dealt with as below:—*

*(1) If the temporary supply as in the case of construction of building etc., is to be converted into permanent supply after completion of the construction, normal procedure to effect the supply to regular categories shall be followed and the consumer shall be charged under temporary supply tariff, i.e., permanent supply procedure shall be adopted with temporary supply tariff. An undertaking shall be obtained from the consumer to the effect that the consumer will accept to convert the temporary supply into appropriate permanent category after completion of the construction work in accordance with the regulations in force and to pay the charges if any arising out of such conversion. In such conversion, if conversion from lower voltage to higher voltage is involved, the existing lower voltage service connection shall be closed and new higher voltage service connection shall be provided in accordance with the regulations in force. In case of conversion or closing of existing service connection account involves dismantling of part or whole of existing service line or erection of part or whole of service line or improvement of part or whole of existing service line or combination of the above, due credit/debit shall be given to the consumer as below:*

*(i) Book value / written down value subject to a minimum of 20% of the cost of retrievable and reusable materials shall be credited.*

*(ii) Scrap value on the retrievable but not reusable materials shall be credited and this value shall be not less than 10% of its original value. No credit or debit shall be levied on the non-retrievable materials.*

*(iii) Dismantling, transport and overhead charges shall be chargeable to the consumer.*

*(iv) Cost of material, transport and erection charges for the part or whole of the new service line or improvement to the existing service line shall be chargeable to the consumer.*

*(3) In case of providing supply purely for the temporary purpose, the following procedure shall be followed.*

*(i) Cost of extension/improvement of lines for providing the supply shall be charged to the consumer.*

*(ii) Security deposit equivalent to three times of the tariff charges for the consumption as calculated below shall be collected and maintained throughout the temporary supply period:*

***Security Deposit** = **3** x **L** x **LF** x **H** x **D** x **T***

*Where,*

*L = Connected Load in kW*

*LF = Load Factor = 0.5*

*H = Number of hours of a day = 24 Hours*

*(4) The Licensee shall refund the balance deposit if any after the temporary supply period is over within a period to be specified by the Commission.*

*D = Number of days of billing cycle period as specified in regulation 8(3) of the Supply Code/ proposed period of use whichever is less.*

*T = Tariff rate of Temporary supply as specified by the Commission from time to time.*

*(iii) The security deposit shall be reviewed during every billing cycle or proposed period of use and enough care shall be taken to maintain the security deposit at the average level of consumption subject to the minimum of the calculated level till the closing of the temporary supply account. At any time, if the security deposit is found to be less than the amount specified, the additional security deposit shall be collected along with the Current Consumption charges.*

*(iv) The temporary supply account shall be closed after the completion of temporary supply period and credit shall be refunded to the consumer as specified in sub regulation (1) of this regulation. The Licensee shall refund the balance deposit, if any after the temporary supply period is over within a period specified by the Commission."*

(By Order of the Tamil Nadu Electricity Regulatory Commission)

S. GUNASEKARAN,
*Secretary,*
*Tamil Nadu Electricity Regulatory Commission.*

Chennai-600 008,
6th September 2013.

**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்**

**அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./மி.ப.வி/8-17, 06-09-2013 நாளிட்டது**

**அறிவிக்கை**

2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 46 ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181 ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப் பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இதன் மூலம் தமிழ்நாடு மின்பகிர்மான விதித்தொகுப்பிற்கு பின்வரும் திருத்தங்களைச் செய்துள்ளது–

**திருத்தம்**

மேற்சொன்ன விதித்தொகுப்பில், 39 ஆம் ஒழுங்குமுறைவிதிக்குப் பதிலாக பின்வரும் ஒழுங்குமுறைவிதி அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது–

**"39. தற்காலிக மின்வழங்கல்:–**

எந்த வளாகத்திற்கும் தற்காலிக மின்வழங்கல் வழங்கப்படுவதற்கு கீழ்கண்டவாறு நடவடிக்கை எடுக்கப்படும்:–

(1) கட்டிடக் கட்டுமானம் முதலியவற்றைப் பொறுத்தளவில், தற்காலிக மின்வழங்கல் நிரந்தர மின்வழங்கலாக மாற்றப்படுமானால், முறைப்படியான வகைகளுக்கு மின்சாரம் வழங்கப்படுவதற்கான வழக்கமான நடைமுறை பின்பற்றப்படும் மற்றும் மின் நுகர்வோர்க்கு, தற்காலிக மின்வழங்கலுக்கான மின்கட்டணம் விதிக்கப்படும், அதாவது மின்வழங்கலுக்கு நிரந்தர வகை நடைமுறையும் மின்கட்டணத்துக்கு தற்காலிக மின் வழங்கலுக்கான மின்கட்டணமும் பின்பற்றப்பட வேண்டும். அந்த மின்நுகர்வோர் தம்முடைய தற்காலிக மின்வழங்கலை, கட்டுமானப்பணி முடிவடைந்த பின்பு நடைமுறையில் உள்ள ஒழுங்குமுறை விதிகளுக்கேற்ப உரிய நிரந்தர வகை மின்வழங்கலாக மாற்ற ஒப்புக் கொள்வார் மற்றும் அத்தகைய மாற்றுதலுக்கான கட்டணம், ஏதேனுமிருப்பின், அதனைச் செலுத்திவிடுவார் என்று அவரிடமிருந்து அந்தப் படிக்கு ஓர் உறுதிமொழி பெறப்படும். தாழ் மின்னழுத்தத்திலிருந்து உயர் மின்னழுத்தத்திற்கான மாற்றம் இதில் சம்பந்தப்பட்டிருந்தால் தற்போது அமைந்துள்ள தாழ்வழுத்த மின்னிணைப்பு முடிக்கப்பட்டு, நடைமுறையில் உள்ள ஒழுங்குமுறை விதிகளுக்கேற்ப, புதிய உயரழுத்த மின்னிணைப்பு வழங்கப்பட வேண்டும். தற்போது அமைந்துள்ள மின்னிணைப்புக் கணக்கு மாற்றப்பட அல்லது முடிக்கப்படும்பொழுது தேவைப்படும் மின்னிணைப்பு பாதையை பகுதி அல்லது முழுமையாக பிரித்தெடுத்தல் அல்லது பகுதி அல்லது முழுமையாக மின்னிணைப்பு பாதையை அமைத்தல் அல்லது பகுதி அல்லது முழுமையாக மின்னிணைப்பு பாதையை மேம்படுத்தல் அல்லது மேற்சொன்ன வகைகளில் எவையேனும் வகைகள் சேர்ந்திருத்தல் ஆகியவற்றிற்கு கீழ்க்கண்டவாறு மின்நுகர்வோர் கணக்கில் வரவு / பற்றுவைக்கப்படும்.

*(i)* மீட்கப்பட்டு மறுபடியும் பயன்படுத்தப்படக்கூடிய பொருள்களின் மீதான 20%-க்குக் குறையாத புத்தக மதிப்பு / குறைக்கப்பட்ட மதிப்பு வரவு வைக்கப்படும்.

*(ii)* மீட்கப்பட்டு ஆனால் மறுபடியும் பயன்படுத்த படக்கூடியதல்லாத பொருள்களின் உடைசல் மதிப்பு வரவுவைக்கப்படும் மற்றும் இந்த மதிப்பு, அதன் தொடக்க மதிப்பிற்கு 10%க்கு குறையாமல் இருத்தல் வேண்டும். மீட்கப்படமுடியாத பொருள்களுக்கு வரவு / செலவு விதிக்கப்படக்கூடாது.

*(iii)* பிரித்தெடுத்தல், போக்குவரத்து மற்றும் அலுவலகச் செலவுகள் மின்நுகர்வோர்க்கு செலவாக சேர்க்கப்படும்.

*(iv)* பகுதி அல்லது முழுமையாக அமைக்கப்படும் புதிய மின்னிணைப்பு பாதைக்கான அல்லது தற்போது அமைந்துள்ள மின்னிணைப்பு பாதை மேம்பாட்டுக்காக பொருள்களின் மதிப்பு, போக்குவரத்து மற்றும் அமைப்பு செலவுகள் மின்நுகர்வோர்க்கு செலவாக சேர்க்கப்படும்.

(2) தற்காலிக நோக்கத்திற்காக மட்டுமேயான மின்வழங்கலைப் பொறுத்தளவில்

*(i)* மின்வழங்கலுக்கான மின்பாதையின் நீட்டிப்பு மற்றும் மேம்பாட்டுச் செலவுகள் மின்நுகர்வோருக்கு விதிக்கப்படும்.

*(ii)* மூன்று பட்டியல் சுற்றுக் காலஅளவிற்கு மின்நுகர்வு கட்டணங்களுக்குச் சமமான கீழ்க்ண்டவாறு கணக்கிடப்பட்ட பிணைய வைப்புத் தொகை வசூலிக்கப்படும் மற்றும் தற்காலிக மின்வழங்கல் கால அளவு முழுவதும் அத்தொகை வைத்துவரப்படும்.

பிணைய வைப்புத் தொகை = $3 \times L \times LF \times H \times D \times T$

L = இணைக்கப்பட்ட மின்சுமை கிலோவாட்டில்

LF = சுமைக்காரணி = 0.5

H = ஒருநாளின் நேரம் = 24 மணி

D = மின்வழங்கல் விதித் தொகுப்பில், ஒழுங்குமுறை விதி 8 (3)–ல் குறித்துரைக்கப்பட்ட பட்டியல் சுற்றுக் காலஅளவு / பயன்பாட்டிற்காக உத்தேசிக்கப்பட்ட கால அளவு, இதில் எதுகுறைவோ, அதற்கான நாட்களின் எண்ணிக்கை.

T = தற்காலிக மின்வழங்கலுக்காக, ஆணையத்தினால் அவ்வப்போது குறித்துரைக்கப்பட்ட மின்கட்டண வீதம்.

(iii) பிணையவைப்புத் தொகை, ஒவ்வொரு பட்டியல் சுற்றுக் காலஅளவு அல்லது பயன்பாட்டிற்காக உத்தேசிக்கப்பட்ட காலஅளவின்போதும் மறுஆய்வு செய்யப்படும் மற்றும் தற்காலிக மின்வழங்கல் கணக்குமுடிக்கப்படும் வரையில் கணக்கிடப்பட்ட அளவிற்கு குறையாத, மின்உபயோக சராசரி அளவில் பிணைய வைப்புத் தொகை வைத்துவரப்படுவதற்கு போதிய கவனம் எடுத்துக் கொள்ளப்படும். எந்தநேரத்திலும், பிணையவைப்புத் தொகையானது, குறித்துரைக்கப்பட்ட அளவைவிட குறைவாக இருப்பதாகக் காணப்படுமானால், கூடுதல் பிணையவைப்புத் தொகை, அந்த சுற்றுக்கான மின்நுகர்வுக் கட்டணங்களுடன் சேர்த்து வசூலிக்கப்படும்.

(iv) தற்கால மின்வழங்கல் கணக்கு, தற்கால மின் வழங்கல் கால அளவு முடிவடைந்த பின்பு முடிக்கப்படும் மற்றும் இந்த ஒழுங்குமுறைவிதியின் துணை ஒழுங்குமுறைவிதி (1) இல் குறித்துரைக்கப்பட்டவாறு மின்நுகர்வோருக்கு வரவு திருப்பிக் கொடுக்கப் படவேண்டும். உரிமம்தாரர், தற்காலிக மின்வழங்கல் காலஅளவு முடிவுற்ற பின்பு, மீதி வைப்பீடு ஏதேனுமிருப்பின், அதனை ஆணையத்தினால் குறித்துரைக்கப்பட்ட காலஅளவிற்குள் திருப்பியளித்தல் வேண்டும்''.

**(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)**

**சி. குணசேகரன்,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

சென்னை—600 008,
2013 செப்டம்பர் 6.

**விளக்கவுரை**

கட்டுமானப் பணிக்காகவும் பிற தற்காலிக நோக்கங்களுக்காகவுமான தற்காலிக மின் வழங்கலுக்கு பொருந்தக்கூடிய தனிப்பட்ட மின்கட்டணம் 20–06–2013 நாளிட்ட ஆணையத்தின் சில்லறை மின்கட்டண ஆணையில் கொடுக்கப்பட்டுள்ளது. கட்டுமானப்பணி நோக்கத்திற்கான தற்காலிக மின்வழங்கலை கோரும் விண்ணப்பதாரர்கள், குறிப்பாக, வீட்டு அல்லது குடியிருப்பு கட்டிடங்களைப் பொறுத்தளவில், தமிழ்நாடு மின்பகிர்மானவிதித் தொகுப்பின் 39ஆம் ஒழுங்குமுறைவிதியில் குறித்துரைக்கப்பட்ட தற்காலிக மின்வழங்கலை செயற்படுத்துவதற்கான சிறப்பு விதிமுறைகள் மற்றும் வரையறைகளை பின்பற்றுவது கடினமானதாக இருக்கக்கூடும். எனவே, கீழ்க்கண்டவாறான இரண்டு வகைகளில் தற்காலிக மின்வழங்கலை பிரிப்பதற்கும் மற்றும் மின்வழங்கலை செயற்படுத்துவதற்கு தனிப்பட்ட விதிமுறைகள் மற்றும் வரையறைகளை குறித்துரைப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது:–

(1) நிரந்தர மின்வழங்கலாக மாற்றப்படக்கூடிய கட்டிட கட்டுமானம், முதலியவற்றைப் போன்ற தற்காலிக மின்வழங்கல்.

(2) தற்காலிக நோக்கத்திற்காக மட்டுமேயான மின்வழங்கல்.

மேலேயுள்ள கருத்துருவை செயல்படுத்த, இந்த திருத்தம் முனைவுறுகிறது.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

**சி. குணசேகரன்,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

சென்னை–600 008,
2013 செப்டம்பர் 6.

**இருந்து வரும் வகைமுறையையும் திருத்தம் செய்யப்பட்ட வகைமுறையையும் காட்டும் விவரவுரை**

***இருந்து வரும் வகைமுறை***

**(1)**

"**39 தற்காலிக மின்வழங்கல்:**

வாளகம் எதற்குமான தற்காலிக மின்வழங்கல், கீழ்க்கண்டவாறான சிறப்பு விதிமுறைகள் மற்றும் வரையறைகளின் பேரில் உரிமம்தாரரால் பரிசீலனை செய்யப்படும்:—

(1) உரிமம்தாரர், ஆர்வமுள்ள மின்நுகர்வோரிடமிருந்து தேவையான கட்டணங்களையும் வைப்பீட்டுத் தொகையுடன் விண்ணப்பத்தைப் பெற்றதன் பேரில் தற்காலிக மின்வழங்கலை நீட்டித்தல் வேண்டும்.

(2) தற்காலிக மின்வழங்கலுக்கான வைப்பீடு கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படும்:—

நீட்டிப்பு மற்றும் மின்னிணைப்பு பொறுத்து பயன்படுத்தப்பட வேண்டிய பொருள்களின் மொத்தமதிப்பு A

***கழிக்க***: மின்னளவிகளின் / மின்பலகையின் / எரியிழை அமைப்பின் மதிப்பு B

மின்நுகர்வோரிடமிருந்து திரும்பப் பெறவேண்டிய பொருட்களின் நிகர மதிப்பு— A-B

***சேர்க்க:*** செய்ய நேர்ந்த தொழிலாளர் கூலிசெலவு- C

***சேர்க்க:*** A-B + C யின் அலுவலகச் செலவில் 15 % D

உண்மையாக இருக்கக்கூடிய முன்னதாகவுள்ள மின்நுகர்வு கட்டணங்கள் E

பெறப்படவேண்டிய மொத்த வைப்பீடு F (A-B+C+D+E)

(3) தற்காலிக மின்வழங்கல் பணிகள் முடிவடைந்ததன் பேரில், பின்வரும் கட்டணங்கள் வைப்பீட்டிலிருந்து சரிக்கட்டப்படும்.

1. மறுபடியும் செப்பஞ்செய்யப்பட்ட பொருள்களுக்கான செலவு 10%.

2. மாற்றப்பட்ட மின்னளவிக்கான செலவு 10%.

3. மறுபடியும் செப்பஞ்செய்யப்படாத பொருள்களுக்கான செலவு 100%.

***உத்தேசிக்கப்பட்ட திருத்தம்***

**(2)**

"**39. தற்காலிக மின்வழங்கல்:—**

எந்த வளாகத்திற்கும் தற்காலிக மின்வழங்கல் வழங்கப்படுவதற்கு கீழ்கண்டவாறு நடவடிக்கை எடுக்கப்படும்:—

(1) கட்டிடக் கட்டுமானம் முதலியவற்றைப் பொறுத்தளவில், தற்காலிக மின்வழங்கல் நிரந்தர மின்வழங்கலாக மாற்றப்படுமானால், முறைப்படியான வகைகளுக்கு மின்சாரம் வழங்கப்படுவதற்கான வழக்கமான நடைமுறை பின்பற்றப்படும் மற்றும் மின்நுகர்வோர்க்கு, தற்காலிக மின்வழங்கலுக்கான மின்கட்டணம் விதிக்கப்படும், அதாவது மின்வழங்கலுக்கு நிரந்தர வகை நடைமுறையும் மின்கட்டணத்துக்கு தற்காலிக மின்வழங்கலுக்கான மின்கட்டணமும் பின்பற்றப்படவேண்டும். அந்த மின்நுகர்வோர் தம்முடைய தற்காலிக மின்வழங்கலை, கட்டுமானப் பணிமுடிவடைந்த பின்பு நடைமுறையில் உள்ள ஒழுங்குமுறை விதிகளுக்கேற்ப உரிய நிரந்தர வகை மின்வழங்கலாக மாற்ற ஒப்புக் கொள்வார் மற்றும் அத்தகைய மாற்றுதலுக்கான கட்டணம், ஏதேனுமிருப்பின், அதனைச் செலுத்திவிடுவார் என்று அவரிடமிருந்து அந்தப்படிக்கு ஓர் உறுதிமொழி பெறப்படும். தாழ் மின்னழுத்தத்திலிருந்து உயர்மின்னழுத்தத்திற்கான மாற்றம் இதில் சம்பந்தப்பட்டிருந்தால் தற்போது அமைந்துள்ள தாழ்வழுத்த மின்னிணைப்பு முடிக்கப்பட்டு, நடைமுறையில் உள்ள ஒழுங்குமுறை விதிகளுக்கேற்ப, புதிய உயரழுத்த மின்னிணைப்பு வழங்கப்பட வேண்டும். தற்போது அமைந்துள்ள மின்னிணைப்புக் கணக்கு மாற்றப்பட அல்லது முடிக்கப்படும் பொழுது தேவைப்படும் மின்னிணைப்பு பாதையை பகுதி அல்லது முழுமையாக பிரித்தெடுத்தல் அல்லது பகுதி அல்லது முழுமையாக மின்னிணைப்பு பாதையை அமைத்தல் அல்லது பகுதி அல்லது முழுமையாக மின்னிணைப்பு பாதையை மேம்படுத்தல் அல்லது மேற்சொன்ன வகைகளில் எவையேனும் வகைகள் சேர்ந்திருத்தல்ஆகியவற்றிற்கு கீழ்க்கண்டவாறு மின்நுகர்வோர் கணக்கில் வரவு / பற்று வைக்கப்படும்.

*(i)* மீட்கப்பட்டு மறுபடியும் பயன்படுத்தப்படக்கூடிய பொருள்களின் மீதான 20%-க்குக் குறையாத புத்தக மதிப்பு / குறைக்கப்பட்ட மதிப்பு வரவு வைக்கப்படும்.

*(ii)* மீட்கப்பட்டு ஆனால் மறுபடியும் பயன்படுத்தபடக் கூடியதல்லாத பொருள்களின் உடைசல் மதிப்பு வரவு வைக்கப்படும் மற்றும் இந்தமதிப்பு, அதன் தொடக்க மதிப்பிற்கு 10%க்கு குறையாமல் இருத்தல் வேண்டும். மீட்கப்பட முடியாத பொருள்களுக்கு வரவு/ செலவு விதிக்கப்படக்கூடாது.

*(iii)* பிரித்தெடுத்தல், போக்குவரத்து மற்றும் அலுவலகச் செலவுகள் மின்நுகர்வோர்க்கு செலவாக சேர்க்கப்படும்.

*(iv)* பகுதி அல்லது முழுமையாக அமைக்கப்படும் புதிய மின்னிணைப்பு பாதைக்கான அல்லது தற்போது அமைந்துள்ள மின்னிணைப்பு பாதை மேம்பாட்டுக்காக பொருள்களின் மதிப்பு, போக்குவரத்து மற்றும் அமைப்பு செலவுகள் மின்நுகர்வோர்க்கு செலவாக சேர்க்கப்படும்.

(2) தற்காலிக நோக்கத்திற்காக மட்டுமேயான மின்வழங்கலைப் பொறுத்தளவில்

*(i)* மின்வழங்கலுக்கான மின்பாதையின் நீட்டிப்பு மற்றும் மேம்பாட்டுச் செலவுகள் மின்நுகர்வோருக்கு விதிக்கப்படும்.

**4.** மூல நிறுவுகைச் செலவுகள், துணைக்கலங்களை அப்புறப்படுத்துவதற்கான செலவுகள் மற்றும் போக்குவரத்து கட்டணங்கள்.

**5.** (மின்னளவி செலவு உள்ளடங்கலாக) பொருட்களின் மொத்த செலவு+தொழிலாளர் கூலிச் செலவின் பேரில் அலுவலகச் செலவு

**(4)** உரிமம்தாரர், ஆணையத்தினால் குறித்துரைக்கப்பட வேண்டியகால அளவிற்குள் தற்காலிக மின்வழங்கல் காலஅளவு முடிவடைந்த பின்பு எஞ்சிய வைப்பீட்டுத் தொகை, ஏதேனுமிருப்பின், அது திருப்பியளிக்கப்படும்.

(ii) மூன்று பட்டியல் சுற்றுக் காலஅளவிற்கு மின் நுகர்வு கட்டணங்களுக்குச் சமமான கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்ட பிணைய வைப்புத் தொகை வசூலிக்கப்படும் மற்றும் தற்காலிக மின்வழங்கல்கால அளவு முழுவதும் அத்தொகை வைத்து வரப்படும்.

பிணையவைப்புத் தொகை = 3 x L x LF x H x D x T

L= இணைக்கப்பட்ட மின்சுமை கிலோவாட்டில்

LF= சுமைக் காரணி = **0.5**

H = ஒருநாளின் நேரம் = **24** மணி

D = மின்வழங்கல்விதித் தொகுப்பில், ஒழுங்குமுறை விதி **8 (3)**—ல்குறித்துரைக்கப்பட்ட பட்டியல் சுற்றுக் காலஅளவு/ பயன்பாட்டிற்காக உத்தேசிக்கப்பட்ட காலஅளவு, இதில் எதுகுறைவோ, அதற்கான நாட்களின் எண்ணிக்கை.

T = தற்காலிக மின்வழங்கலுக்காக, ஆணையத்தினால் அவ்வப்போது குறித்துரைக்கப்பட்ட மின் கட்டண வீதம்.

(iii) பிணைய வைப்புத் தொகை, ஒவ்வொரு பட்டியல் சுற்றுக் காலஅளவு அல்லது பயன்பாட்டிற்காக உத்தேசிக்கப்பட்ட கால அளவின்போதும் மறுஆய்வு செய்யப்படும் மற்றும் தற்காலிக மின்வழங்கல் கணக்கு முடிக்கப்படும் வரையில் கணக்கிடப்பட்ட அளவிற்கு குறையாத, மின்உபயோக சராசரி அளவில் பிணையவைப்புத் தொகை வைத்து வரப்படுவதற்கு போதிய கவனம் எடுத்துக் கொள்ளப்படும். எந்தநேரத்திலும், பிணையவைப்புத் தொகையானது, குறித்துரைக்கப்பட்ட அளவைவிட குறைவாக இருப்பதாகக் காணப்படுமானால், கூடுதல் பிணையவைப்புத் தொகை, அந்த சுற்றுக்கான மின்நுகர்வுக் கட்டணங்களுடன் சேர்த்து வசூலிக்கப்படும்.

(iv) தற்கால மின்வழங்கல் கணக்கு, தற்கால மின் வழங்கல் கால அளவு முடிவடைந்த பின்பு முடிக்கப்படும் மற்றும் இந்த ஒழுங்குமுறை விதியின் துணை ஒழுங்குமுறை விதி **(1)** இல் குறித்துரைக்கப்பட்டவாறு மின்நுகர்வோருக்கு வரவு திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். உரிமம்தாரர், தற்காலிக மின்வழங்கல் காலஅளவு முடிவுற்ற பின்பு, மீதி வைப்பீடு ஏதேனுமிருப்பின், அதனை ஆணையத்தினால் குறித்துரைக்கப்பட்ட காலஅளவிற்குள் திருப்பியளித்தல் வேண்டும்''.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

**சி. குணசேகரன்,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

சென்னை—**600 008**,
**2013** செப்டம்பர் **6.**

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU